**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.14/2025** |
| Deposition of witness | : | P.W.8 |
| Name | : | திருமதி. பாண்டியம்மாள் |
| Father's /Husband Name | : | பாலசங்கரன் |
| Village | : | விளமல் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 52 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day of August 2025. A1, A3, A4 absent. petition under section 355 BNSS filed. Allowed. A2 died.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.08.2020 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பிலிருந்த போது அளிவலம் சமத்துவபுரம் முத்துவீதியில் வசித்து வரும் விஸ்வநாதன் என்பவரின் மனைவி 25 வயது மதிக்கத்தக்க அபிராமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று அதற்கு நிலைய மனு எண்.116/2020 என வழங்கி விசாரணைக்கு பிறகு கடந்த 15.09.2020 ம் தேதி காலை 10.00 மணிக்கு நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.12/2020 சட்டப்பிரிவுகள் 498(A). 352. 506(i) இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன்அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை காவல் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை என்னால் பதிவு செய்யப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு நான் இவ்வழக்கினை விசாரணைக்கு

எடுத்துக்கொண்டேன். கடந்த 15.09.2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெங்கடேஷ், கோகுல் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பங்கள் வாங்கினேன். **அதற்கான பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் அபிராமி, காயத்ரி, ராமகிருஷ்ணன், முத்துலெட்சுமி, சுந்தரமூர்த்தி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான வெங்கடேஷ், கோகுல் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் தொடர்புடைய எதிரிகளை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் 1ம் எதிரியான விஸ்வநாதன் என்பவரை கடந்த 15.09.2020 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் தென்கரை பஸ் ஸ்டாப் அருகே இருந்தவரை அடையாளம் கண்டு இவ்வழக்கின் காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து பிறகு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் தொடர்புடைய மற்ற எதிரிகளான கிருஷ்ணமூர்த்தி, வசந்தா, கல்பனா ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றதால் அவர்களை இவ்வழக்கில் நான் கைது செய்யவில்லை. இத்துடன் எனது விசாரணையை முடித்து மேல்விசாரணைக்கு ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரத்தை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.26 13:47:38 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.